தமிழ்நாடுவேளாண்மைப் பல்கலைக்கழகம்

தமிழ்நாடு நெல் ஆராய்ச்சி நிலையம் - ஆடுதுறை

# தஞ்சாவூர் மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை

(03.08.2022 முதல் 07.08.2022)

அறிக்கை எண்: 61/2022 தேதி: 02.08.2022

## தஞ்சாவூர் மாவட்டத்தின் கடந்த வார வானிலை

பெரும்பாலான பகுதிகளில் அதிகபட்ச வெப்பநிலை 33 °செ முதல் 35 °செ ஆகவும் மற்றும் குறைந்தபட்ச வெப்பநிலை 26 °செ முதல் 27 °செ ஆகவும் பதிவானது. மேலும் ஆங்காங்கே மழை பெறப்பட்டது.

## தஞ்சாவூர் மாவட்டத்தில் எதிர்பார்க்கப்படும் வானிலை (03.08.2022 முதல் 07.08.2022)

| கடந்த வார வானிலை (29.07.2022 முதல் 01.08.2022) | | | | காரணிகள் | அடுத்த ஐந்து நாட்களுக்கான வானிலைமுன்னறிவிப்பு (03.08.2022 முதல் 07.08.2022) வரை | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| நாள்-1 29/07 | நாள்-2 30/07 | நாள்-3 31/07 | நாள்-4 01/08 | தேதி | நாள்-1 03/08 | நாள்-2 04/08 | நாள்-3 05/08 | நாள்-4 06/08 | நாள்-5 07/08 |
| 0 | 0 | 8.5 | 3.4 | மழை (மி.மீ.) | 8 | 4 | 4 | 3 | 0 |
| 35 | 33 | 35 | 33 | அதிகபட்ச வெப்பநிலை (°செ) | 35 | 33 | 35 | 33 | 33 |
| 27 | 27 | 26 | 26 | குறைந்தபட்ச வெப்பநிலை (°செ) | 27 | 27 | 26 | 26 | 26 |
| 6 | 5 | 8 | 6 | மேகமூட்டம் (ஆக்டா) | 6 | 5 | 8 | 6 | 6 |
| 77-67 | 71-68 | 73-67 | 77-68 | அதிகபட்ச மற்றும் குறைந்தபட்ச காற்றின் ஈரப்பதம் (%) | 80-70 | 80-60 | 70-60 | 70-60 | 70-60 |
| 4 | 4 | 4 | 5 | காற்றின் வேகம் (கி.மீ./மணி) | 4 | 4 | 4 | 5 | 4 |
| மேற்கு வட மேற்கு | மேற்கு வட மேற்கு | மேற்கு வட மேற்கு | மேற்கு தென் மேற்கு | காற்றின் திசை | தெற்கு | தெற்கு | தெற்கு | தென் தென் கிழக்கு | தென் தென் கிழக்கு |

## தஞ்சாவூர் மாவட்டத்திற்கான வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை

வரும் நாட்களில் வானம் பெரும்பாலும் மிதமான மேகமூட்டத்துடன் காணப்படும். 03.08.2022 முதல் 06.08.2022 வரை தினமும் மழை எதிர்பார்க்கப்படுகிறது. அதிகபட்ச வெப்பநிலை 33 °செ முதல் 35 °செ ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 26 °செ முதல் 27 °செ ஆகவும், காலை நேர காற்றின் ஈரப்பதம் 80 சதவிகிதமாகவும், மாலை நேர காற்றின் ஈரப்பதம் 70 சதவிகிதமாகவும் பதிவாக வாய்ப்புள்ளது. சராசரியாக காற்றின் வேகம் மணிக்கு 4-5 கி.மீ. அளவுக்கு பெரும்பாலும் தெற்கு திசையிலிருந்து வீசக்கூடும்.

## வேளாண் அறிவுரைகள்

| | | |
|---|---|---|
| பொது | | வரும் நாட்களில் லேசானது முதல் மிதமான மழை பெய்யும் என்பதால் வயல்களில் முறையான வடிகால் வசதி ஏற்படுத்தவும். |
| | | பயிர்களுக்கு உரம் இடுவது மற்றும் பூச்சி மருந்து தெளிப்பதை தவிர்க்கவும். |
| வாழை | | வாழை சாகுபடி செய்யும் விவசாயிகள் வாழை மரங்களுக்கு முட்டுக்கொடுத்து முறையான வடிகால் வசதி ஏற்படுத்தவும். |
| கால்நடைகள் | ஆடு மற்றும் மாடு | எதிர்பார்க்கப்படும் மழையால் கன்றுகள் மற்றும் ஆட்டுகுட்டிகளுக்கு சளி போன்ற உபாதைகள் ஏற்பட்டு நுரையீரல் அழற்ச்சி ஏற்பட வாய்ப்புள்ளது. எனவே மழை சாரல் படாமல் பார்த்துக்கொள்ள வேண்டும். |

## குறுஞ்செய்தி

வரும் நாட்களில் லேசானது முதல் மிதமான மழை பெய்யும் என்பதால் வயல்களில் முறையான வடிகால் வசதி ஏற்படுத்தவும்.

**இயக்குநர்**